# நாடகக் கலைஞன் சிவ. சண்முகவடிவேல்

ஏழாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவரத்தினம் என்பவருக்கும் புங்குடுதீவைச் சேர்ந்த அருணாசலம் மகேஸ்வரி என்பவருக்கும் நான்காவது மகனாகப் பிறந்தவர் சண்முகவடிவேல். நாமிருவர் நமக்கிருவர் என்று தாய் தந்தையர் நினைத்திருந்தால் நாம் ஒரு நல்ல கலைஞனை இழந்திருப்போம்.

ஏழாலை ஒரு விவசாயக் கிராமம். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்கு பிரிவுகளைக் கொண்ட பெரிய கிராமம். கல்வி வேள்வியில் சிறந்த பல பெரியோர்களைக் கொண்டது இக்கிராமம்.

09.11.1940 அன்று பிறந்த சண்முகவடிவேல், நாடகத்தில், இலக்கியத்தில், சமய ஈடுபாட்டில், பொதுச் சேவைகளில் சிறந்து விளங்கினார். ஒன்பது உடன் பிறப்புகளோடு பிறந்தவர். நிறைவான அறிவோடு இல்லற துன்பத்தில் சிக்காமல், ஞான வாழ்வு வாழ்ந்தவர்.

தன்னுடைய வாழ்வு முறையால், தான் பிறந்த கிராமத்திற்கு புகழ் சேர்த்தவர். நாடகத்திற்கும் இலக்கியத்திற்கும் புகழ் சேர்த்தவர். குடும்பமும் கிராமமும் தமிழ் மக்களும் பெருமையடைய வாழ்ந்து காட்டியவர். சண்முகவடிவேலாகப் பிறந்து, சிவசண்முகவடிவேலாகிப் பின்பு சிவநெறிச் செல்வராக வாழ்வை நிறைவு செய்தவர்.

சோக்கல்லோ சண்முகமாகிய எனக்கு 20 வயது சண்முகவடிவேலுக்கு 16 வயது. இரு சண்முகங்களும் சேர்ந்து முதன் முறையாக ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை மண்டபத்தில் 'சோக்கல்லோ சண்முகம்' என்ற நகைச்சுவைக் கதம்ப நிகழ்ச்சியை மேடையேற்றினோம். இது குறைந்தது 750 தடவைகளுக்கு மேல் மேடையேறிய ஒரு நிகழ்ச்சி. பாதிக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளில் சண்முகவடிவேல் இணைந்திருந்தார். வடக்கின் கிராமங்களில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் இந்நிகழ்ச்சி மேடையேறியது.


சண்முகவடிவேல், 'சிமெண்ட்பக்டரி' கணபதிப்பிள்ளை ஆகியோர் தயாரித்த பல நாடகங்களில் நானும் சண்முகவடிவேலும் இணைந்திருந்தோம். எங்களோடு கோபால், இலட்சுமிகாந்தன், மகாதேவன், இராஜேஸ்வரன், மஹான், சந்திரசேகரம், ஆலால சுந்தரம்...இப்படி இன்னும் பலர் இணைந்திருந்தார்கள்.

நான் ஏழாலையிலிருந்து விலகி மலையக வாசியான பின்பு சண்முகவடிவேல் அவர்கள் பல கிராமத்து இளைஞர்களைச் சேர்த்து முத்தமிழ் மன்றத்தை உருவாக்கினார். பல சரித்திர சமய இலக்கிய நாடகங்களை மேடையேற்றினார். 'சோழன் துறவு', 'மண்ணில் மறையுது மாணிக்கம்', 'மண்பொம்மை', 'தங்கம்', 'அன்னை பூமி' அவற்றில் சில.

சண்முகவடிவேலிடம் எனக்கு 'இராசா' வேடம் கேட்டு சண்டைபிடித்த நினைவுகளும் வருகின்றது. எவ்வளவு குழந்தைப் பிள்ளைதனம் என்று நான் இப்போது நினைக்கின்றேன். அதற்கும் சண்முவடிவேல் ஒரு சிரிப்புச் சிரித்தார். எல்லாவற்றிற்கும் சிரிப்புத் தான் அவரது மருந்து. ஒரு கட்டத்தில் முத்தமிழ்மன்ற தேர்தலின் போது 'தாடியனே வெளியேறு' என்று சிலர் 'சுவரொட்டி' ஒட்டிய போதும் இதே சிரிப்புத்தான் பதில்.

ஈழத்து சிறுகதை முன்னோடிகள் இருவர் ஏழாலையைச் சேர்ந்தவர்கள். ஒருவர் 'இலங்கையர்கோன்' மற்றவர் சி. வைத்தியலிங்கம். இவர்கள் இருவரும் உறவினர்கள். அத்தோடு இவர்கள் இருவரும் எனக்கும் உறவினர், என்று சொல்வதில் எனக்குப் பெருமை. இலங்கையர்கோன் அண்ணர் முறையானவர். சி. வைத்தியலிங்கம் குஞ்சியப்பு. இலங்கையர்கோனின் 'விதானையார் வீடு' நாடகத்தில் சண்முகவட்டன் என்ற பாத்திரம் என்னை வைத்து எழுதியது.

இந்த இலங்கையர்கோன்தான் சண்முகவடிவேலை தத்தெடுத்து வளர்த்தவர். அதனால் தான் சண்முகவடிவேல் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் படித்தார். இலங்கையர்கோன் வாழ்ந்தது உடுவிலில், இறுதி நேரத்தில் இலங்கையர்கோனின் வாகனச் சாரதியாகவிருந்த சண்முகவடிவேல் கல்முனையில் காலமான இலங்கையர்கோனின் பூதவுடலை ஏழாலைக்கு கொண்டுவந்து சேர்த்தார். கல்முனை நீலாவாணன் பற்றி எழுதிய எஸ்.பொ. இலங்கையர்கோன் பற்றியும் சண்முகவடிவேல் பற்றியும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.



சண்முகவடிவேல் யாழ்ப்பாணம் ஆரிய-திராவிடபாஷா அபிவிருத்திச்சங்கம் நடத்திய பாலபண்டிதர் பரீட்சையில் 1964ம் ஆண்டு சித்தியெய்தியவர். மல்லாகம் சட்டத்தரணி எம்.எஸ் சுப்பிரமணியத்திடம் ஆங்கிலம் கற்றவர். 90களில் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அனுசரணையோடு காசியாத்திரை மேற்கொண்டவர். கல்வி பிழைப்பிற்கு என்று மற்றவர்கள் ஓடி ஓடிப் படித்தபோது, அறிவை சமயப் பணிக்கும் பொதுப்பணிக்கும் செலவிட்டவர்.

இலங்கை வானொலி சண்முகநாதன் (சானா) நாடகத் தயாரிப்பாளராக இருந்த காலத்தில் சண்முகவடிவேலின் நாடகங்களுக்கு நிறையவே ஆதரவு வழங்கினார். சண்முகவடிவேலின் நாடகங்களில் 'சோழன் துறவு' முக்கிய இடம்பெற்றது. இவரின் 'சோழன் துறவு' ஒத்திக்கைக்காகவும் ஒலிப் பதிவுக்குமாக இரு தினங்கள் 1972ம் ஆண்டில் ஆனி மாதத்தில் 17, 18 திகதிகளில் கொழும்பில் தங்கியிருந்தார். கொழும்பில் அவரை மீண்டும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஏழாலை ஆத்மஜோதி தியானமணிமண்டபம் இவரது 'திருவடிப்பெரும் சிந்திப்பரியன' நாடகங்கள் சிலவும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு நூலை வெளியிட்டு கௌரவம் செய்தது.

ஏழாலை தா. சண்முகநாதன் அறுபது வருடங்களுக்கு முன்பு எழுதிய 'கோமதியின் கணவன்' என்ற நாவலின் மறுபதிப்புக்கு இவரை முன்னுரை எழுதுமாறு கேட்டு பெரும் கௌரவம் செய்தது. சைவநீதி, அருள்ஒளி போன்ற சமய சஞ்சிகைகளில் சமயக் கட்டுரைகள் எழுதி சிறப்பித்திருக்கின்றார். மல்லாகம் பழம்பிள்ளையார் கோவில் குகசர்மாவுடன் சேர்ந்து புராணபடனங்கள் நிகழ்த்தியுள்ளார். திருமுறைப் பாராயணச் செல்வர், திருநெறிய தமிழ்ச்செம்மல் (1994), கலைஞானகேசரி, கலாபூஷணம், சிவநெறிச் செல்வர் போன்ற பட்டங்களுக்குச் சொந்தக்காரன்.

செல்வரத்தினம், திருஞானசெல்வம், தில்லைநடேசன், சண்முகவடிவேல், சிவஞானசுந்தரம், சரோஜினிதேவி, இலட்சுமிகாந்தன், சாரதாதேவி சண்முகதாஸ், ஸ்ரீகாந்தன் இவரது உடன்பிறப்புக்கள். நாடகம், பிரசங்கம், புராணபடனம் திருமுறை ஓதல் திருவாக முற்றோதல் இவை தாம் இவரது தொழில்.

'நமக்குத் தொழில் சமயம், நாட்டுக்கு உழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல்'.

சண்முகவடிவேலைக் காணுகின்ற போதெல்லாம் எனக்கு நாடக ஆசான், சங்கரதாஸ் சுவாமிகள் தான் நினைவுக்கு வருகிறார்.

ஏழாலை வடக்கு பாரதி சனசமூக நிலையம் நடத்திய பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் 1973,74,75 ஆண்டுகளில் தொடர்ந்து பரிசுகள் பெற்றுள்ளார், சுண்ணாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் நடத்திய போட்டியில் சிறுகதைக்கு (1974) பரிசு, 2002 வலம்புரி பத்திரிகை நடத்திய சிறுகதை போட்டியில் பரிசு, போகுமிடமெல்லாம் புகழையும் பரிசுகளையும் அள்ளிவரும் கலைஞன், பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் உற்ற சகோதரங்களும் பெருமை பெற வாழ்ந்தவர். சண்முகவடிவேல், பாரதிக்கு எப்படி ஒரு யாழ்ப்பாணச் சுவாமியோ? அதே போல் பாரதியின் பித்தனாகிய எனக்கும் ஒரு சண்முகவடிவேல் சுவாமி.

சண்முகவடிவேல் ஏழாலை கிராமசபையின் இரண்டாம் வட்டார அங்கத்தவராக இருந்தவர். ஏழாலை மேற்கின் ஒரு பகுதியே கோட்டைக்காடு. சமூகக் கொடுமைகளுக்கு உள்ளான மக்கள் வாழ்கின்ற பகுதி. இருசாராரும் சண்முகவடிவேலுக்கு மனமுவந்து வாக்களித்தார்கள். ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குக்களால் தெரிவு செய்யப்பட்ட சண்முகவடிவேல் அவர்கள், இன்றைக்கும் அம்மக்களை அடக்கநினைக்கின்ற வர்க்கத் தலைவரையே கிராமசபைத் தலைவராக தெரிவதற்கு வாக்களித்தார் என்பதுதான் கொடுமையிலும் கொடுமை.

சண்முகவடிவேலின் குடும்ப அங்கத்தவர்கள் அனைத்துப்பேரும் என்னிடமும் அன்பு பாராட்டினார்கள். அவருடைய தாய் எனக்கு தாய் போன்றவர். என்னுடைய தாயை மிகச்சிறுவயதில் நான் இழந்தவான். அதனால் கிராமத்திலுள்ள தாய்மார்கள் என்னை தங்களுடைய பிள்ளையாக நினைத்தார்கள். சண்முவடிவேலின் தாய் மகேஸ்வரியை கிராமத்தவர்கள் 'மிதித்தவிடத்துப் புல்லுச்சாகாது' என்று சொல்வார்கள்.

நானும் சண்முகவடிவேலும் நீண்ட நேரம் கலந்துரையாடுவோம். அடிக்கடி கலந்துரையாடுவோம். 'நாம் இலங்கையர்' என்ற

## ஆடித்து முத்துக்கள் 170

- சோக்கல்லோ சண்முகநாதன் -

ஒரு இயக்கத்தை நண்பர்கள் சேர்ந்து ஆரம்பித்தோம். சண்முகவடிவேல் அதன் செயலாளராக நியமிக்கப்பட்டார். நான் 'இலங்கையர்கோன் விழாச்சபை' ஒன்றை ஆரம்பித்து அதன் மூலம் இலங்கையர் கோன் அவர்களுக்கு விழாவெடுத்த போது, சண்முகவடிவேலை இதனோடு இணைக்க முற்பட்டேன், அவர் எல்லவற்றிலும் ஒதுங்கியே இருந்தார். முடிவில் துறவற நிலைக்குச் சென்றார்.

சுண்ணாகத்தில் ஒரு பெரிய விவசாய ஊர்வலம் நடத்தினோம். அதில் பிரதம விருந்தினர் ஒரு விவசாயி. விவசாயி சண்முகவடிவேலை ஊர்வலத்தில் கொண்டு சென்றோம். மேளதாளங்களோடு கொண்டு சென்றோம். விபரம் அறியாதவர்கள் இவர் யார்? இவர் யார்? என்று கேட்டு நின்றார்கள். சண்முகவடிவேலின் தந்தை சிவரத்தினம் ஒரு நல்ல விவசாயி. சண்முகவடிவேலின் சகோதரர் இருவர் நல்ல விவசாயிகள். சண்முகவடிவேலும் ஒரு நல்ல விவசாயி. இவரை பல தடவைகள் வாழைத் தோட்டத்துக்குள்ளேயே சந்தித்திருக்கிறேன், விவசாயிகளின் உச்சகாலமான 70 - 77 காலப் பகுதியையும் சண்முகவடிவேல் வரவேற்றார். வெற்றியையோ, தோல்வியையோ பெரிதுபடுத்தாத எதற்கும் இச்சைப் படாத வாழ்வு வாழ்ந்தவர் சண்முகவடிவேல்.

சண்முகவடிவேல் தோல்வியை வெற்றியாக மாற்றியவர். அவருடைய தாய் தந்தை, சகோதரங்களுக்கு எவ்வளவோ சோதனைகள், துன்பங்கள், அவையெல்லாம் சண்முகவடிவேலை நன்கு பாதித்தன. இவர் இறுதிவரை பிரமச்சாரிய விரதத்தைக் கைக்கொண்டவர். வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களே இவரை துறவறத்தை நோக்கித் தள்ளின, என்பது எனது அபிப்பிராயம்.

நானும் சண்முகவடிவேலும் சுண்ணாகத்தில் இரண்டு வேறு வேறு கடைகளில் ஒரு கால கட்டத்தில் வேலை செய்தவர்கள். அவர் ஒரு இரும்புக் கடையிலும், நான் ஒரு சர்பத் கடையிலும் வேலை செய்தவர்கள். அத்தோடு வீடுவீடாகப் பேப்பர் விநியோகம் செய்யும் வேலையும் செய்தவன் நான். அப்போதும் சண்முகவடிவேலைக் கண்டு பேசுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

கனடாவில் ஏழாலை ஊர் மன்றம் சண்முகவடிவேல் அவர்களை நினைவு கூர்ந்து. ஒரு சிறப்புச் செய்தது. என்னை நண்பன் என்ற ரீதியிலும் ஊரவன் என்ற ரீதியிலும் அவர் பற்றிய சில நினைவுகளை மீட்பதற்கும் உதவியது. அவருக்கு முத்தமிழ் மன்றத்தில் மார்பளவு சிலை வைப்பதற்கும் ஏற்பாடுகள் நடந்தன. ஏழாலை முத்தமிழ்மன்றத்தில் அத்திபாரமும் இடப்பட்டது. மூன்று வருடங்கள் கடந்துவிட்டன எதுவும் நடக்கவில்லை. சண்முகவடிவேல் ஏப்பிரல் 20, 2014ல் இவ்வுலகை நீத்தவர். பொய்யுடல் நீங்கி புகழுடல் பெற்றவர். வாழ்க அவர் புகழ்!

sanmuganathan@thaiveedu.com

